

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.6.2024) அண்ணா அறிவாலயத்தில், தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் பொதுச் செயலாளர் திருப்பூர் அல்தாப் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, நாடாளுமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி 40–க்கு 40 தொகுதிகளிலும் மாபெரும் வெற்றி பெற்றதையொட்டி வாழ்த்துத் தெரிவித்தனர்.

# அவ்வையார் விருது பெற்ற தனித்துவ எழுத்தாளர் ஃபாஸ்டினா சூசைராஜ் (எ) பாமா போன்ற புதிய பெண் எழுத்தாளர்கள் இலக்கிய உலகில் அறிமுகம் ஆக வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

**சென்னை, ஜூன் 13-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 2024ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருது பெற்ற திருமிகு ஃபாஸ்டினா சூசைராஜ் (எ) பாமா அவர்களை வாழ்த்தி சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:**

ஒரு சமூகம் எந்தளவுக்கு முற்போக்காகத் திகழ்கிறது என்பதை, அந்தச் சமூகம் எழுத்தாளர்களைக் கொண்டாடுவதைக் கொண்டு அளவிடலாம். எளிய மக்களின் வாழ்வியலைத் தங்களது எழுத்தின் வழியாக உணர்த்தி மாற்றங்களுக்கு வித்திடும் எழுத்தாளர்கள் போற்றுதலுக்குரியவர்கள்.

எழுத்தாளர் பாமா அவர்களை நாம் போற்றுவது காலத்தின் தேவையாகிறது. அவரது தாக்கம் புதிய பெண் எழுத்தாளர்களைத் தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்ய வேண்டும்.


உடல்நிலை காரணமாகத் தாமதமாக அவர் இந்த ஔவையார் விருதை பெற்றுக்கொண்டிருக்கிறார். அந்த விருதை நான் வழங்கியபோது அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை!

அவர் இன்னும் நிறைய எழுத வேண்டும்! அவரது எழுத்துகள் இன்னும் பலரை எழுதத் தூண்ட வேண்டும்!

சாதி, மதம், பாலினம், இனம் எனப் பல்வேறு அடையாளங்களினூடே ஒடுக்கு முறையின் அரசியலை அழுத்தமாகப் பேசும் 'கருக்கு' எனும் தன்வரலாற்றுப் புதினத்தின் வழியாக உலக அளவில் கவனம் ஈர்த்த எழுத்தாளர் பாமா (எ) பாஸ்டினா சூசைராஜ் அவர்கள் தமிழ்நாடு அரசின் இந்த ஆண்டுக்கான ஔவையார் விருதைப் பெறுகிறார்.

மரபுகளை உடைக்கும் தனித்துவமான எழுத்துநடையால் தமிழிலக்கியத்துக்குப் பங்காற்றி, இந்த விருதுக்குத் தேர்வாகி இருக்கும் அவருக்கு எனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



சென்னை தெற்கு மாவட்டக் கழகப் பொருளாளர் வேளச்சேரி எஸ்.பாஸ்கரனின் மகன் பா.தருண்ராஜ் – அ.சுஷ்மிதா இணையரின் திருமண வரவேற்பு விழா சென்னை நீலாங்கரையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று மணமக்கள் இருவரும் பெரியாரும் சுயமரியாதையும் போல நல்வாழ்வு வாழ வாழ்த்தினார். உடன் அமைச்சர் மா.சுப்பிரமணியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### கோவை ஜூன் 15ல் கழக முப்பெரும் விழாவில்

# மயிலாடுதுறை மாவட்டக் கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்போம்!

## மாவட்ட கூட்டத்தில் தீர்மானங்களை விளக்கி நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., சிறப்புரை!

மயிலாடுதுறை, ஜூன். 13 -

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழுகூட்டம் மயிலாடுதுறையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. அவைத்தலைவர் கே.ஜி. சீனிவாசன் தலைமை தாங்கினார். கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்தும், வாக்கு எண்ணிக்கை முகவர்களின் பணிகள் குறித்து மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் பேசினார். கூட்டத்தில் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம்.சித்திக், ,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இராம. இளங்கோவன், முத்து. மகேந்திரன், ஜி.என்.ரவி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், மாவட்டக் கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என்.இளையபெருமாள், மலர்விழி திருமாவளவன், மங்கை எம்.சங்கர், ஏ.ஜி. ஜெ.பிரபாகரன், பஞ்சு. குமார், பி.எம்.அன்பழகன், எம். அப்துல மாலிக், அமுர்த. விஜயகுமார், ஞான.இமையநாதன், , கு. வைத்தியநாதன், ஏ.ஆர். ராஜா, தகவல் தொழில்நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதார், மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் கபிலன், பி. சிவதாஸ், ஹர்ஷத், சுபா நெடுஞ்செழியன், அ.காந்தி, பேரூர் கழகச் செயலாளர்கள் எஸ். கே.முத்துராஜா, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எம்.கே.மருது, சௌமியன்,வி.எஸ்.என்.செந்தில், எம். எஸ். முத்து குபேந்திரன், வி.எஸ்.பிரபாகர், என்.சாந்தி, வெடி எஸ். பாலமுருகன், ராஜ்குமார், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழவை கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க மயிலாடுதுறை மாவட்டத்தில் ஆண்டு முழுவதும் கழகத்தின் சார்பில் பொதுக்கூட்டங்கள், நலதிட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தியும், அதில் கலந்து கொண்டும் கலைஞர் புகழுக்கு பொருமை சேர்த்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற, நாடாளுமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும்,

2024 நாடாளுமன்ற தேர்தலில் இந்தியாவுக்கும், இந்தியா கூட்டணிக்கும் வழிகாட்டியாக திகழ்ந்த கழகத்தலைவர், திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர் தளபதி அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள தோழமைக் கட்சி தலைவர்களை மட்டுமின்றி அகில இந்திய தலைவர்களையும் அரவணைத்து இந்த மாபெரும் வெற்றியை இன்றைக்கு தமிழ்நாட்டிலும், இந்திய அரசியலிலும் முத்திரை பதித்து தமிழ்நாட்டில் 40க்கு 40 என்று சொல்லி அடித்த கழகத்தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வது என்றும்,

மயிலாடுதுறை நாடாளுமன்ற தொகுதியில் இந்தியா கூட்டணி சார்பில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்டு 2,71,000த்திற்கு மேல் வாக்கு வித்தியாசத்தில் வெற்றிப்பெற்றமைக்கு வாழ்த்து தெரிவித்துக் கொள்வதோடு தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிட்ட தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி சார்பில் போட்டியிட்ட வெற்றிப் பெற்ற 40 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வது என்றும், மயிலாடுதுறை நாடாளுமன்ற தேர்தலில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள மயிலாடுதுறை, சீர்காழி, பூம்புகார் சட்ட மன்ற தொகுதியில் அதிக வாக்குகள் பெற்று வெற்றிக்கு உழைத்திட்ட அனைத்து கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சியினர், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதியினர், சார்பு அணியினர், வாக்காளர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும்,

ஜூன் 15ம் தேதி கோவையில் நடைபெற உள்ள தமிழினத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, 40 நாடாளுமன்ற தொகுதிகளிலும் பெற்ற வெற்றிக்கு தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, இந்தியா, வியந்து பார்க்கும் இந்த வெற்றிக்கு நம்மை அழைத்துச் சென்ற கழகத்தலைவர், திராவிட மாடல் அரசின் முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு விழா ஆகிய மூன்றையும் இணைந்து நடைபெறும் முப்பெரும் விழாவில் மயிலாடுதுறை மாவட்டத்தில் இருந்து கழக நிர்வாகிகள், கழகத்தினர் அதிக அளவில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# தி.மு.கழக முப்பெரும் விழாவில் பெருந்திரளாக பங்கேற்போம்!

## பூண்டி கே.கலைவாணன் பங்கேற்ற மாவட்ட செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம்!

திருவாரூர், ஜூன் 13.

கோவையில் நடைபெறும் தி.மு.கழக முப்பெரும் விழாவில் திருவாரூர் மாவட்டம் சார்பில் பெருமளவில் பங்கேற்போம் என திருவாரூர் மாவட்ட தி.மு.கழக செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாவட்ட அவைத்தலைவர் க.தன்ராஜ் தலைமையிலும் மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், எம். ராமகிருஷ்ணன், சாந்தி பாஸ்கர் ,தலைமை செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத் தில் பூண்டி. கே.கலைவாணன் எம். எல்.ஏ.,பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள்,

இந்திய துணைக் கண்டமே திரும்பிப்பார்க்கும் ஒப்பாரும் மிக்காரும் இல்லா முதல்வராக , இந்தியாவின் பிறமாநிலங்கள் பின்பற்றும் வகையில் எண்ணற்ற நலத்திட்ட வகையில் மக்கள் நலத்திட்ட தந்து தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி உள்ளிட்ட 40இடங்களிலும் அமோக வெற்றியை ஈட்டிய இந்தியா கூட்டணியின் நாயகர் கழக தலைவர் திராவிட நாயகர் தளபதி அவர்களுக்கு திருவாரூர் மாவட்ட கழகம் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்து, கழக தலைவர் தலைமையில் 2026 தேர்தலிலும் வரலாற்று சிறப்புமிக்க வெற்றியை பெறவாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வது.

கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின்படி கோவையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் திருவாரூர் மாவட்ட சார்பில் பெருந்திரளாக பங்கேற்பது.

தமிழ்நாடு முழுவதும் நாற்பதுக்கும் நாற்பதை வெற்றியாக கொடுத்த மக்களுக்கு நன்றிகளை தெரிவிப்பதோடு, திருவாரூர் மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர், மற்றும் கிளை, வார்டு கழக மக்களுக்கு நன்றிகளை தெரிவிக்க நிர்வாகிகள் தகுந்த ஏற்பாடுகளை உடனடியாக செய்வது.

அனைத்து இடங்களிலும் தி.மு.கழகத்தின் பெருமையாம் இருவண்ண கொடி மேடைகளை அமைக்க அரசு விதிகளின்படி இடங்களை தேர்வு செய்து கருப்பு சிவப்பு கொடிகளை ஏற்றுவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

கூட்டத்தில் தி.மு.க. மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் பங்கேறனர்.

# கழக இலக்கிய அணி நிர்வாகிகள் கூட்டம்!

## மாநிலச் செயலாளர் வி.பி.கலைராஜன் அறிவிப்பு!

கழக இலக்கிய அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 17.6.2024 திங்கள்கிழமை அன்று மாலை 4.30 மணியளவில் எனது (வி.பி.கலைராஜன்) தலைமையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி நிகழ்ச்சிகள் நடத்துவது குறித்து ஆலோசிக்கப்படவிருப்பதால் நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** கோவை முப்பெரும் விழா.

**வி.பி.கலைராஜன்**
செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் பி.வி.கே.என். மேல்நிலைப்பள்ளியில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு அந்தந்த பள்ளியிலேயே ஆதார் பதிவு மற்றும் ஆதார் எண் புதுப்பித்தல் சிறப்பு முகாமை துவக்கி வைத்தனர். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் (பொ) பக்தவத்சலம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### ஜூன் 15ஆம் தேதி கோவையில் கழக 'முப்பெரும் விழா!'

# திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன் அறிக்கை!



திருப்பூர், ஜூன் 13-

கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் "முப்பெரும் விழா பொதுக் கூட்டத்தில்" திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டுமென மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

வருகின்ற 15.06.2024ம் தேதி சனிக்கிழமை அன்று மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் தமிழகத்தில் 40க்கு 40 தொகுதிகளிலும் வெற்றிவாகை சூட வைத்த வெற்றி நாயகன், தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்துக் கொள்ளும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, 40 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு விழா என நடைபெறும் "முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில்" திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

அதுசமயம், இக்கூட்டத்தில் திருப்பூர் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், இந்நாள், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர்கள், நகரமன்ற தலைவர்கள், பேரூராட்சிமன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், நகராட்சி, பேரூராட்சிமன்ற உறுப்பினர்கள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக் குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதிமாறன் எம்.பி. முன்னிலையில்

# துறைமுகம் மேற்கு: கல்லூரி மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்குகிறார்!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி - மேயர் பிரியா - கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 12 -

காலம் உள்ளவரை கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா, சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்குபகுதி தி.மு.க சார்பில் கழக இளைஞர் அணிச்செயலாளர், இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் கல்லூரி மாணவ - மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை மற்றும் உபகரணங்கள் வழங்குகின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்கு பகுதி தி.மு.க சார்பில் கலைஞர்100, 91வது நிகழ்ச்சியாக உயரத்தின் திராவிடர் வேதம்! ஒலிக்கட்டும் உதயகீதம்! எனும் தலைப்பில் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் உபகரணங்கள் வழங்கும் விழா இன்று (13.06.2024, வியாழக்கிழமை) காலை 11.00 மணியளவில், சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

இப்புகழரங்கத்தில் சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்கு பகுதி கழக செயலாளர் எஸ்.முரளி தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி, முன்னிலையில் பி.கே. மூர்த்தி, ப.ஸ்ரீராமுலு எம்.சி, கூ.பீ.ஜெயின் எம்.சி, டாக்டர்.ஜி.சாந்தகுமாரி எம்.சி, சரிதா மகேஷ் குமார் எம்.சி ஆகியோர் வரவேற்கின்றனர்.



திருவாரூர் மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம், மாவட்ட அவைத்தலைவர் க.தன்ராஜ் தலைமையிலும் மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், சாந்தி பாஸ்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.,பங்கேற்று சிறப்புரையாற்றினார்.